**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 72/2015**

**வழக்கு சாட்சி: PW.14**

**தேதி: 06.11.2024**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | **தர்மர்** | **ஜாதி:** |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

என் தகப்பனார் பெயர் முனியன். நான் தற்சமயம் காளையார்கோவில் தாலுகா ஒய்யவந்தான் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். 28.02.2013ம் தேதி நான் காஞ்சிரங்கால் குரூப் கிராம உதவியாளராக பணியாற்றினேன். அப்போது அங்கு வெள்ளைச்சாமி என்பவர் விஏஓ-வாக பணியாற்றினார். 28.02.2013ம் தேதி காலை 08.30 மணியளவில் சிவகங்கை தாலுகா வட்டக் காவல் ஆய்வாளர் விஏஓ-விற்கு போன் செய்து தாலுகா காவல் நிலையத்திற்கு வரச் சொன்னார். அதனால் நானும் விஏஓ-வும் அன்று காலை சுமார் 09.00 மணியளவில் சிவகங்கை தாலுகா காவல் நிலையம் போனோம். அப்போது கண்ணாயிருப்பு கருப்புசாமி மகன் சதீஸ் என்பவர் அங்கிருந்தார். அவர் எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார். அதில் நானும் விஏஓ-வும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பனங்காடி கிராம காட்டுச்சூரையில் மாணிக்கம் என்பவரது கிணற்றின் அருகே போலீசார் காலை 10.00 மணியளவில் வீட்டு சாவி ஒன்றை கைப்பற்றினார்கள். அந்த சாவி என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.பொ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு 12.30 மணியளவில் கானூர் கண்மாயில் டாடா ஏஸ் வண்டி ஒன்றை போலீசார் கைப்பற்றினார்கள். அந்த வண்டியின் புகைப்படம் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அது சம்பந்தமான போலீசார் தயாரித்த அத்தாட்சியில் நான் கையெழுத்து போட்டேன். அந்த அத்தாட்சி என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அந்த அத்தாட்சி ஏற்கனவே அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு அப்போது நான் கிராம உதவியாளர் இல்லை. கானூர் கண்மாய் வழக்கு சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் சமயத்தில் எனது அதிகார வரம்பு எல்கைக்குள் இல்லை. மாணிக்கம் கேணிக்கு அருகே சாவி கைப்பற்றப்பட்டதாக காவல் துறை விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லியிருக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல.

ஒப்புதல் வாக்குமூலத்தில் காவல் நிலையத்தில் வைத்து கையெழத்துப் போட்டேன். அத்தாட்சியில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்துப் போட்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்துப் போட்டேன். நான் சொல்லியுள்ளது போல் 2ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. 2ம் எதிரியிடமிருந்து சாவியோ வாகனமோ கைப்பற்றவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் போலீசாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.72/2015**

**வழக்கு சாட்சி: PW.15**

**தேதி: 06.11.2024**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | **பொண்ணுப்பிள்ளை** | **ஜாதி:** |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் திருமாஞ்சோலையில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எனது வீட்டில் வாத்தியார் குடியிருந்தார். பெயர் ஞாபகமில்லை. 7, 8 வருடங்களுக்கு முன்பு வீட்டை பூட்டிவிட்டு சென்ற அவர், அவரை காணவில்லை. 2 மாதம் கழித்து அவரது மனைவி வீட்டிலிருந்த சாமான்களை எடுத்து சென்றுவிட்டார். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை